செய்தி வெளியீடு எண்:**301** **நாள்:10.6.2009**

**இந்து சமய அறநிலையத்துறை, சென்னை.**

**செய்திக் குறிப்பு**

**இந்து சமய அறநிலையத்துறையில் நான்கு உதவி ஆணையர் அலுவலகப் பயன்பாட்டிற்காக புதியதாக டாட்டா ஸ்பேசியோ என்ற ஈப்பு வாகனங்கள் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது. உதவி ஆணையர்–தூத்துக்குடி, உதவி ஆணையர்–விருதுநகர், உதவி ஆணையர்–தர்மபுரி, உதவி ஆணையர்–திருவண்ணாமலை ஆகிய நான்கு அலுவலகங்களுக்கு இந்த ஈப்பு வண்டிகள் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களால் இன்று 10.6.2009 வழங்கப்பட்டது. இந்த வாகனங்களுக்கான சாவிகளை உதவி ஆணையர் பிரிவின் ஓட்டுநர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள். இந்த நான்கு வாகனங்களின் மொத்த மதிப்பு ரூ. 16.56 இலட்சமாகும்.**

**இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் திரு.தி. ஜெயராமன், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் திரு.த. சுந்தரம் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.**

வெளியீடு:**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**